மீண்டும் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—05

பம்பபடையூர் பகுதியிலே நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நேரடி நெல் கொள்முதல் நிலையம் எந்த இடத்தில் வேண்டுமோ, அந்த இடத்தில் இருக்கிற விவசாயிகள் 33 சென்ட் நிலத்தை, நுகர்வோர் வாணிபக் கழகத்திற்கு இனாம் சாசனம் செய்து கொடுத்தாலோ அல்லது அந்தப் பகுதிகளிலே இருக்கிறவர்கள் நியாயமான விலையில் 33 சென்ட் நிலத்தை அரசுக்கு அடையாளம் காட்டினால் அதனைக் கிரையம் வாங்கிக் கொண்டோ உடனடியாகக் கட்டப்படுகிறது. எங்கெல்லாம் விவசாயிகள் கோரிக்கை வைக்கிறார்களோ அங்கெல்லாம் தேவையின் அடிப்படையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் கட்டிக் கொடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 350, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

350—

பேருந்து வசதி

***30094—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியிலுள்ள எழுமலையிலிருந்து வத்தலகுண்டு, செம்பட்டி வழியாக திருப்பூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

[2015 செப்டம்பர் 25

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) எழுமலையிலிருந்து திருப்பூருக்குச் செல்லும் நேரடி பயணிகளினுடைய அடர்வு குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அடர்வு அதிகரிக்கும்பட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதிக்குட்பட்ட எழுமலையில் வாழும் மக்களில் அதிகமானோர் திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டங்களிலுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். குறிப்பாக, உத்தபுரத்திலே சாதிக் கலவரம் ஏற்பட்ட பிறகு, அந்தப் பகுதி மக்களெல்லாம் திருப்பூர், கோயம்புத்தூர் பகுதிகளிலே பணியில் இருக்கின்றனர். அந்த அடிப்படையிலே, நீண்ட நாட்களாக அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையான எழுமலையிலிருந்து திருப்பூருக்கு, வத்தலகுண்டு, செம்பட்டி வழியாகப் பேருந்து இயக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்தலகுண்டு, செம்பட்டி வழியாக 152 நடைகள் திருப்பூருக்கு பேருந்துகள் செல்கின்றன. பயணிகள் அவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர். அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். அடர்வு அதிகரிக்கும்பட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2015 செப்டம்பர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், செம்பட்டியிலிருந்து விக்கிரமங்கலத்திற்கு, நிலக்கோட்டை, அணைப்பட்டி வழியாக, விவசாய மக்கள் மலர்கள் மற்றும் விளைந்த காய்கறிகளைக் கொண்டு செல்ல வசதியாக அந்தப் பகுதியிலே நகரப் பேருந்து விட வேண்டுமென்றும், உசிலம்பட்டியிலிருந்து மல்லப்புரம் வழியாக மயிலாடுதுறைக்கு, அதாவது தேனியையும் மதுரையையும் இணைக்கின்ற அந்தச் சாலையில் பேருந்து இயக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அந்தச் சாலை அமைக்கப்பட்டு, அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு, நிறுத்தப்பட்டிருக்கின்றன. தற்போது, சிற்றுந்து இயக்கினால் அந்தப் பகுதி மக்களுடைய தேவைக்குப் பயனுள்ளதாக இருக்கும். சுமார் 40, 50 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வருவது குறைக்கப்படும். அந்த அடிப்படையிலே, அந்தப் பேருந்தையும் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், மதுரை, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து சின்னக்குறவடிக்கும், டி. கல்லுப்பட்டியிலிருந்து தா. எழுமலைக்கும் பேருந்துகளை இயக்க வேண்டும். ஏனென்றால், பள்ளி மாணவர்கள் சென்று வருவதற்கு வசதியாக இருக்கும். இப்பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உசிலம்பட்டியிலிருந்து மயிலாடுதுறைக்கு நேரடி பேருந்து இயக்க வேண்டுமென்று கேட்கின்றார்கள். ஏற்கெனவே தேனியிலிருந்து செல்கின்ற பேருந்து அந்த வழியாகத்தான் செல்கின்றது.*

அதைப்போல, விவசாயிகள் காய்கறிகளை ஏற்றிச் செல்வதற்காக பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள்.

காலை 5 மணி முதல் அந்தப் பகுதிகளிலே போதிய அளவிற்குப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், தேவை என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 351, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

351—

வரி விலக்கு

***37439—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதிப்புக் கூட்டு வரியிலிருந்து சூரிய சக்தி மின் சாதனங்களுக்கு விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் நான்காம் அட்டவணை, பகுதி 'B', வரிசை எண் 26-ன்படி தற்போது சூரிய சக்தியினால் இயங்கும் சூரிய ஒளி சமையற்கலன்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்,*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS